''என் கடன் பணிசெய்து கிடப்பதே''

''யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா''
—புறநானூறு.

முல்லைக் கொடி

கிளை 9	துன்முகி, தை 8-2 57	தளிர் 17

வல்லான் வகுத்தது....

உலகம், நாகரிகத்தின் சிகரத்தை எட்டிவிட்டதாக எண்ணினோம். இனி, எங்கும் போரும் இல்லை புரட்சியும் இல்லை, எளியாரை வலியார் வாட்டுவது; நம்பி வாழ்வாரை நடுவிற் கைவிடுவது, பிறர் பொருளைக் கவரப் பெருஞ்சதிகள் தீட்டுவது ஆகிய செயல்கள் எல்லாட நாட்டில் தலைகாட்டா. அவ இறந்தகால நிகழ்ச்சிகளாக வரலாறு பேசும் என்று றுதி மகிழ்ந்தோம்.

இந்த அணுக்குண காலத்திலும் இத்தகைய ட அமைதியும் மகிழ்ச்சியும் தந் மக்களைக் களிக்க வைத்தது ங்கிய நாணய மன்றம்.

மன்றத்தின் பெயருக். த்தக்கபடி அது, நாணயமு கண்ணியமும் தலைமைச் சா பும் பொறுப்பும் வாய்ந்து இது வரை உலகில் அமைதி நிலவு தற்கான அரிய பெரிய சாதனைகளைப் புரிந்து வந்துள்ளதை நாம் மறப்பதற்கில்லை.

ஆனால், ஐ. நா. மன்றம் இன்று செல்லும் போக்கு, திடுக்கிடக் கூடியதாகவுள்ளது. பெருங்கடல் மத்தியில் ஆயிரக்கணக்கான ஆருயிர்களைச் சுமந்து செல்லும் மரக்கலம் சுழற்காற்றால் திசை திரிந்து காந்தமலையின் ஈர்ப்புச் சக்தியால் இழுக்கப்பட்டு அதன்பால் விரைந்தோடுவதை ஒத்துள்ளது. காந்தமலையின் அருகிற் செல்லும் கப்பலின் கதி யாதாகும் என்பதனை விளக்க வேண்டுவதில்லை.

இந்தியாவில் நீண்ட காலமாக இருந்துவரும் காஷ்மீர நாட்டுத் தகராறு உலகறிந்த தொன்று.

இந்தியாவோடு சேர்ந்து கலந்து இந்தியக் குடிமக்களாக இனிதுவாழக் காஷ்மீர மக்கள் பெருவிருப்புடன் இருப்பதும் பாகிஸ்தானியர் அந் நாட்டைத் தம் நாட்டோடு இணைத்துக் கொள்ளச் செய்துவரும் சதிச் செயல்களும் குழப்பங்களும் வெட்ட வெளிச்சமானவை.

சில காலத்துக்குமுன் அந் நாட்டு மக்கள் விருப்பத்துக்கெதிராகப் பாகிஸ்தானியர் காஷ்மீரத்தில் வரம்புமீறிப் புகுந்து சிலபாகங்களை வலிந்து பற்றினார்கள்.

மக்கள் விருப்பமும் தன் கடமையும் இன்னதென்று நன்கறிந்த இந்திய ஆட்சி இந்த சிக்கலைத் தீர்த்து நல்லதொரு முடிவு காணக் கூடியது ஐக்கிய நாணய மன்றமே என்று தேர்ந்து உடனே இந்த குழப் ங்களை மன்றத்திடம் விண் ப்பித்தது. உடனடியாகத் தீர்வுகாண வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது. அண்மையிலேயே காஷ்மீர மக்கள் துன்பத்துக்கொரு விடிவு காண்பதுறுதி என்று நம்பியது. மன்றத்தின் நல்ல தீர்ப்பை விநாடிக்கு விநாடி எதிர்பார்த்தது.

பாகிஸ்தான் பிரதமரும், வெளிநாட்டமைச்சரும் காஷ்மீரம் தமக்குத்தான் உரியது என்றும், தாம் இதுவரை செய்துபோந்த 'ஆக்ரமிப்புகள்' சாலவுந் தகுதியானவையே என்றும் பட்டவர்த்தனமான பச்சைப் பொய்க் கருத்துக்களை வைத்துப் பெருக்கிப் பேசிய பகட்டுரைகளுக்கெல்லாம் மன்றம் செவி சாய்த்து வந்தது கண்டு மக்கள் சிந்திக்கலானார்கள்.

எப்படியும் முடிவு இந்திய விண்ணப்பத்துக்கு எதிராக வராது என்றுதான் நம்பினார்கள். இந்திய அரசும் பாகிஸ்தானியர் பொய்ம்மாயப் புரட்டுகளை எல்லாம் மன்றத்திடம் திட்டவட்டமாக விளக்கி செயத்தக்க செயல்களைத் தன் சால்பு குன்றாவகையில் இயம்பத் தவறவில்லை.

ஆனால் இன்று ஐ. நா. மன்றம், பாகிஸ்தானியர் கூற்றுக்களுக்கே பெருமதிப்புக் கொடுத்தது போல், அவர்கள் கருத்துக்கிணங்கத் தம்பார்வையில் காஷ்மீரத்தில் மக்கள் வாக்களிப்பு நிகழ வேண்டும் என்று கூறும் முடிவு, உண்மையிலேயே உலகில் ஒரு பெருங் கலகலப்பு உண்டாக்கி விட்டது.

இந்தியாவைவிடப் பெரிதான நிலப்பரப்பு, மக்கள் பெருக்கு இவற்றைப் படைத்துள்ள சீனவுக்கு இதுவரை மன்றத்தில்

(7-ம் பக்கம் பார்க்க)

மொழிப் பகுதி — அறிவு வலிமைக்கு

எங்கெங்கு காணினும் சக்தியடா!

(அமுதா கந்தசாமி)

உலகம் தோன்றியது. மனிதன் தோன்றினான். அவர்களை இயக்கும் சக்தி ஒன்று தன் திருவிளையாடலைத் தொடங்கியது. மனிதன் நீண்ட காலம் வரை அப்படி ஒரு சக்தி இருப்பதையே உணரவில்லை. தன் காரியங்களுடைய நன்மை தீமைகளெல்லாம் தன்னாலேயே ஏற்படுபவை என எண்ணினான். காலப்போக்கில் தனக்கும் மேலாக நிற்கும் ஒரு சக்தி தன்னை இயக்குவதைஉணர்ந்தான். அதுவரை, களையற்று ஒளியற்று சோம்பிக் கிடந்த அவன் முகம் பளீரென ஒளிவீசத் தொடங்கியது. சிந்தனை பிறந்து விரிந்து நீண்டது.

அவனுடைய பார்வையில் ஆழ்ந்த ஆராய்ச்சி மிதந்தது. மனிதனுடைய பிறப்பு அவன் வசமில்லை. இறப்பும் அவன்வசமில்லை. இடைக்காலமாகிலும் அவன் விருப்பின்படி ஓடக்கூடாதா? அதுவுமில்லை. ஆக இப்படி எல்லாவற்றிலும் ஏதோ புலனாகாத சக்திக்குட்பட்டு ஆடும் மனிதனுக்கு 'யான்' 'எனது' என்றெல்லாம் அகந்தை கொள்ள என்ன தகுதி இருக்கிறது? 'யான்' என்பதும் 'எனது' என்பதும் உலகில் ஒன்றுமில்லை. பொருளற்றவெறும்வார்த்தைகள்.

சக்தியின் திறனை எண்ணி வியந்தான். அதன் ஆற்றலை எண்ணித் தலை கவிழ்ந்தான். அதன் வன்மையை எண்ணி இறும்பூது எய்தினான். அதன் மாட்சிமைக்கு முன் தஞ்சமடைந்தான். ஒரு நாள் வைகறைப் போது, செவ்விய ஞாயிறு தன் அழகான ஒளிக்கற்றைகளை உலகில் பொழிந்தவாறு பவனிவரத் தொடங்கினான்.

ஞாயிற்றின் ஒளி வீசும் செவ்விய எழிலும், நீலத் திரைக்கடலின் இன்னிசையுடன் கலந்த மனமோகன எழிலும் வானத்தை அளாவிய குன்றின் மாண்பும் நீலவானும், அதில் உலா வரும் சந்திரனும் வைரமணிகளென மின்னும் தாரகைக் கூட்டங்களும், சக்தியின் தோற்றங்களாகவே தோன்றின. மாபெரும் உண்மையைக் கண்டறிந்தான்.

உண்மையை அறிந்த அவன் உள்ளத்தில் மகிழ்வு பொங்கியது. கண்களின் ஓரத்தில் நீர் முத்து மின்னியது. வன்மை, கொடுமை கடுமை அனைத்தும் மறைந்தது. மென்மை மேலோங்கியது. அருள் உள்ளம் வளர்ந்தது. சக்தியின் வல்லமையைப் பூரணமாக உணர்ந்த மனிதன் பண்பு மிக்க வாழ்வை நாடி நடத்தினான். இளங்குழவியின் வெள்ளைச் சிரிப்பின் இனிமை இறைவனை உணர்த்தியது. சக்தியே இறைவன் என்று கண்டு இறைவனை வணங்கினான். உருவமளித்துப் போற்றினான். இறைவன் அவன் கற்பனையில் தோன்றும் மாதிரிகளிலெல்லாம் வடிவம் பெற்று விளங்கினான்.

நாம் கோயிலில் இருக்கும் இறைவனின் திருவுருவங்களை மட்டும் சக்தியாகக் கருதி, செயற்கையின் நெருக்கடியில் உழன்று கோயில் வழிபாடு மட்டும் நடத்தினால் போதுமா?

நம் முன்னோர்கள் அறிவிற் சிறந்த பெருமக்கள். வாழ்க்கையை இயற்கையோடியைந்ததாக அமைத்தார்கள். துறவு நிலையுற்ற துறவிகள் எப்போதும் இறைவனுடைய நேர்ப்பார்வையில் இருக்க விரும்பினார்கள், எனவே பசிய தோற்றங்களுடைய காடு எங்கே? மலைகள் எங்கே? எழில் மிக்க நீர் நிலைகள் எங்கே? என்று தேடியலைந்தனர் போலும்.

இயற்கையை முற்றிலும் உணர்ந்து அதன் வன்மைக்கு அடிபணிந்து போற்றி தூய வாழ்வு வாழ்பவனே மனிதன். நீலவான் எனப்படும் பெருவெளியைப் பார்த்தால் அதன் வன்மையை உணர முடியவில்லை. ஆழ்ந்து சிந்தித்தால் அதன் வன்

(5-ம் பக்கம் பார்க்க)

சமயப் பகுதி – அருள் வலிமைக்கு

நீ கண்பாராத செயலென்னே!

(மணி)

இறைவன் அன்பும் அருளும் உடையவன். இனிய வடிவினன். தித்திக்கும் கனி போன்றவன்; தேன் போன்ற அமுதமானவன், அழகன்; உயிர்க்கு அம்மையும் அப்பனுமாவன்.

இறைவன் குழந்தைகள் நாம்; அவன் கண்பாரா விட்டால் நம் வாழ்க்கை இனிமையதாக இருக்காது, துன்பமாக இருக்கும்:

பகுத்தறிவு என்பது நமக்கு இருந்தாலும் அவனையறியும் ஞானம் நமக்கில்லை. அவன் இருப்பது தெரியும்; அவன் ஆற்றல் தெரியும் ‘மின்சாரம்’ இருக்கிறது என அறிவோம், அது ஒளிவிடுவதை அறிவோம். வேறுபல செயலுக்குப் பயன்படுகின்றது, ஆனால் கண்டு களிக்கும் அறிவு பெற்றோமில்லை.

இறைவன் அடியினை அடைய வேண்டும்; அவனுக்கு நிகர்யாருமில்லை; மனக்கவலையோ எல்லாவற்றினும் நிகரற்றது; அதற்கு ஈடு இணையில்லை; அவ்வளவு துன்பம் தரத் தக்கது. இதனை நீக்கஇறைவன் அடிகளைத் தவிரவேறு ஒரு வழியுமில்லை,

பிறவியோ ஒரு பெருங் கடல்; துயரமோ அதை விடப் பெரிய கடல்; துயர்படும் போது ஒரு நாள் ஒரு யுகம் போன்று தெரிந்தால் அதனை மிகப் பெரிய ஆழ்கடல் என்று தானே கூற வேண்டும்.

துயர் தீராதா என நாம் ஏங்குகின்றோம்; அதிலே அழுந்தி யிருப்பதும் பாரமல்லவா! எனவே துயர் நீங்க வேண்டும் என்று நாம் எண்ணுவதும் இயல்புதானே!

சிறு குழந்தை ஒன்று குளக்கரையிலே விளையாடுகின்றது. தவளையிடும் சப்தம் கேட்டு அதனைக் கல்லால்அடிக்கின்றது. அடித்தால் பாவம் என்று அதற்குத் தெரியாது, அடித்தால் நாமும் அதுபோல் துன்புறுவோம் என்று அறிவுறுத்தஒருவர்வேண்டாவா? அறிவுறுத்தியும் திரும்பத் திரும்பத் தீச் செயலையே செய்தால் யார்தான் அறிவுறுத்துவார்கள் “எக்கேடாகிலும்கெட்டுப்போகட்டும்” என்றல்லவா இருப்பர். அக்குழந்தை பின்பு சிறிது அறிவு பெற்றது. அது முன் செய்த தீச் செயலை மறந்து விட்டது. இன்று பலவாற்றாலும் துன்புறுகின்றது. ஆனால் அது வருந்தும் துன்பத்தைப் பார்த்து யாரே துடைப்பர்? ‘கேளாத பிள்ளை’ என்றல்லவோ எல்லாரும் இருப்பர். அக்குழந்தை இவர்கள் கருத்தை அறிந்து தெளிந்திருக்குமா? ஒன்றும் தெரியாது துன்புற்று, அணைப்பார்களா என்றெல்லாவா ஏங்கி வருந்தும்,

இராமலிங்க அடிகள் இறைவனை நினைந்து நெக்குருகிப் பாடுகின்றார், “தந்தையே! தந்தையே! ஓயாத துயர்க்கடலில் அழுந்தி நாளும் அத்துயர் தீராதோ என ஏங்குகின்றேன்! நான் உன் மகனல்லவா! பாவியென என்னை எண்ணிவிட்டனையோ! நீநிரம்பக்கருணை புரிவாயென்று பல நாட்களாக இருந்தேனே! ஏமாந்திருந்தேனே! உன்னைத்தவிர எனக்குத் துணை யாருமில்லையே! என்செய்வேன்? உன் கருத்தைஅறிந்திலனே! சிறப்புள்ள தணிகை முருகனே! அமுதமானவனே! ஆதி தெய்வமே! நீ கண்பாராத செயலென்னே” என்று ஏங்கிப் பாடுகின்றார்.

அப்பாடல்:

தீராத துயர்க்கடலி
லழுந்தி நாளும்
தியங்கியழு தோங்கு
மிந்தச் சேய்க்கு நீகண்
பாராத செயலென்னே
யெந்தா யெந்தாய்
பாவியென விட்டனையோ
வன்னுளாக
ஏராய அருள் தருவா
யென்றே யேமாந்
திருந்தேனே யென்
செய்கேன் யாருமில்லேன்
சீராரும் தணிகைவரை
யமுதே யாதி
தெய்வமே நின்கருத்தைத்
தெளிந்தி லேனே.

—அருட்பா

* * * *

மா, வ - எ. 31
திரு வி. ஆர். திருவேங்கடம்
அவர்கள்
"சொர்ணவிலாஸ்"
இரத்தினசபாபதி முதலி தெரு.
தண்டையார் பேட்டை. சென்னை 21

மா, வ - எ. 32
திரு சி. கி. இராமசாமி நாயுடு
அவர்கள்
11, நியூ பென்ஷனர் லேன்,
கத்தியவாக்கம் ஐ ரோடு,
பழைய வண்ணாரப் பேட்டை
சென்னை-21.

மா, வ - எ. 33
திரு ப. பத்மநாபன் அவர்கள்
4, சோமசுந்தர தேவர் 4-வது தெரு,
அயன்புரம், சென்னை-23.

மா, வ - எ. 34
திரு வி. பி. கோவிந்தன் அவர்கள்
18-1, மேயர் பாசுதேவ் தெரு,
பழைய வண்ணாரப் பேட்டை,
சென்னை-21.

மா, வ - எ. 35
திரு எதிராஜம்மாள் அவர்கள்
7, பெரிய நெய்க்காரன் தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 36
திரு கே. என். பலராமன் அவர்கள்
கோவிந்தசாமி நாயகர் காலனி,
ராதா நகர்,
குரோம் பேட்டை.

மா, வ - எ. 37
திரு செல்வ மாணிக்கம்மாள்
அவர்கள்
2, முருகேச முதலி தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 38
திரு கே. வி. மோகனரங்கன்
அவர்கள்
29, சக்கரை செட்டித்தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 39
திரு பூ. கிருஷ்ணசாமி செட்டியார்
அவர்கள்
61, சுந்தரமூர்த்தி விநாயகர்கோவில் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5.

மா, வ - எ. 40
திரு பா. பாபு அவர்கள்
2, கங்கம்மான் கோவில் சந்து,
பழைய வண்ணாரப் பேட்டை,
சென்னை-21.

மா, வ - எ. 41
திரு ந. இராமலிங்கம் அவர்கள்
13, சடையப்ப முதலி தெரு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-28.

மா, வ - எ. 42
திரு பூ. கலியாண சுந்தரம் அவர்கள்
1-2, குழந்தைவேல் தெரு,
புரசை, சென்னை-7.

மா, வ - எ. 43
திரு அகத்தீசுவரன் அவர்கள்
11. வடமலை மேஸ்திரி தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 44
திரு வி. டி. கந்தசாமி அவர்கள்
ஆசிரியர், எழும்பூர் உயர் நிலைப்பள்ளி,
7ஏ, வேனல்ஸ் ரோடு,
எழும்பூர், சென்னை-8.

மா, வ - எ. 45
திரு மு. ந. மாசிலாமணி அவர்கள்
241, லிங்கி செட்டித் தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 46
திரு ஜீவரத்னம்மாள் அவர்கள்
3, பட்டு ராசப்ப முதலி தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 47
திரு ஆர். பெருமாள் முதலியார் அவர்கள்
11, சுந்தரவிநாயகர் கோவில் தெரு,
சென்னை-21.

மா, வ - எ. 48
திரு மு. காயா ரோகணம் பிள்ளை அவர்கள்
2-23, செங்கழுநீர் பிள்ளையார் [கோவில் தெரு,
மண்ணடி, சென்னை-1.

மா, வ - எ. 49
திரு வ. ஏ. சண்முகம் அவர்கள்
250, லிங்கி செட்டித் தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 50
திரு டி. வேங்கடராமன் அவர்கள்
23, வேங்கடய்யர் தெரு,
மண்ணடி, சென்னை-1.

மா, வ - எ. 51
திரு எஸ் நடராசன் அவர்கள்
4-28, சைவ முத்தையமுதலி தெ ,
சென்னை-1.

மா. வ - எ. 52
திரு மு. அ. முருகேசன் அவர்கள்
81-82, சஞ்சீவிராயன் கோவில் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை-1.

மா, வ - எ. 53
திரு சி. எஸ். சுப்பராய செட்டியார் அவர்கள்
40, தங்கசாலைத்தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 54
திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்
23, வெங்கடய்யர் தெரு,
மண்ணடி, சென்னை-1.

மா, வ - எ. 55
திரு. கே. சி. குமரகுரு அவர்கள்
7 பி, சுப்பராயபிள்ளை தெரு,
கொண்டித்தோப்பு சென்னை-1.

மா, வ - எ. 56
திரு எஸ். கே. தியாகராசன் அவர்கள்
79. திருவொற்றியூர், ஐ ரோடு,
சென்னை-21.

மா, வ - எ. 57
திரு மா. அண்ணாமலை அவர்கள்
46, விஜய நாராயணதாஸ் ரோடு,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

மா, வ - எ. 58
திரு என். வரதராசலு அவர்கள்
51, சோனையப்பன் தெரு,
சென்னை-21.

மா. வ - எ. 59
திரு கே. எ. சீனிவாசன் அவர்கள்
14, வெங்கடேச நாயக்கன் தெரு,
சென்னை-1.

மா. வ - எ. 60
திரு சி. எ. எதிராசலு அவர்கள்
18, சென்ன கேசவ பெருமாள்
கோவில் தெரு.
சூளை, சென்னை-7.

மா. வ - எ. 61
திரு காமகோட்டியம்மாள் அவர்கள்
35, பாரிஸ் வெங்கடாசல அய்யர் தெரு,
சென்னை-1

மா. வ - எ. 62
திரு டி. கணேசன் அவர்கள்
13, ஆதியப்பசெட்டித் தெரு,
சிந்தாதிரிப் பேட்டை,
சென்னை-2.

மா. வ - எ. 63
திரு. ஆர். பட்டம்மாள் அவர்கள்
266, தங்கசாலைத் தெரு,
சென்னை-1.

மா. வ - எ. 64
திரு. ஆர். நடராசன் அவர்கள்
36, செங்கல்வராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

மா. வ - எ 65
திரு பி. பி. செல்வராஜ் அவர்கள்
16. இராமகிருஷ்ணன் தெரு,
சென்னை-1.

மா. வ - எ. 66
திரு ஜி. சாரங்கபாணி அவர்கள்
63. பேரம்பாலு செட்டித் தெரு.
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை-21.

மா. வ - எ. 67
திரு டி. எஸ். மன்னூர் செட்டி
அவர்கள்
40, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு,
சூளை, சென்னை-7.

மா. வ - எ. 68
திரு ஆ. சி. சடகோபன் அவர்கள்
18, வில்லேஜ் ரோடு,
நுங்கம் பாக்கம், சென்னை-6.

மா. வ - எ. 69
திரு கிருஷ்ணவேணியம்மாள்
அவர்கள்
1-6, காளப்பாச்சாரி தெரு,
சென்னை-3.

மா. வ - எ. 70
திரு மீனாக்ஷி சுந்தரமுதலியார்
அவர்கள்
'திருப்புகழ் நிலையம்'
1, ஜானகிராம் பிள்ளை தெரு,
பழைய மாம்பலம்,
சென்னை-17.

மா. வ - எ. 71
திரு சி. எஸ். கணபதி அவர்கள்
68, மார்கட் தெரு,
பிரம்பூர், சென்னை-11.

மா. வ - எ. 72
திரு எம். எஸ். வேதகிரி முதலியார்
அவர்கள்
105, தாணுதெரு,
புரசை, சென்னை-7.

மா. வ - எ. 73
திரு நு. மகாலிங்கம் அவர்கள்
116-118, மார்கட் தெரு.
பிரம்பூர், சென்னை-11.

மா. வ - எ. 74
திரு பி. வி: கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
வரதராசபுரம், அம்பத்தூர். (அஞ்சல்)

மா. வ - எ. 75
திரு வி. ஜி. செல்வராசு அவர்கள்
52, கிருஷ்ணப்ப நாயக்கன் குளத்தெரு,
சென்னை-1.

மா. வ - எ. 76
திரு. சி. கே. சி. அப்பாசாமி அவர்கள்
10, மூக்காத்தாள் தெரு,
புரசை, சென்னை-7.

மா. வ - எ. 77
திரு மங்கையர்க்கரசி அவர்கள்
3. நம்மாழ்வார் தெரு,
சென்னை-1.

மா. வ - எ. 78
திரு லக்ஷிமிதேவி அவர்கள்
117, அம்மன் கோவில் தெரு,
சென்னை-1.

மா. வ - எ. 79
திரு. சொ. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்
34, ராமசாமி தெரு,
மண்ணடி, சென்னை 1.

மா. வ - எ. 80
திரு. பி. பி. சுந்தரம் அவர்கள்
கால்நடைக் கல்லூரி,
வேப்பேரி, சென்னை. 7.

மா. வ - எ. 81
திரு. அ. கோவிந்தசாமி அவர்கள்
18, அஸீஸ் நகர்,
1வதுதெரு, கோடம்பாக்கம்,
சென்னை 24.

மா. வ - எ. 82
திரு. சி. தாமோதர முதலியார் அவர்கள்
4, சர்வேபார்ட்டி,
காளஹஸ்தி,
சித்தூர் மாவட்டம்.

மா. வ - எ. 83
திரு. கந்தசாமி கவுண்டர் அவர்கள்
கீழண்டை வீதி.
திருவெண்ணெய் நல்லூர்.

மா. வ - எ. 84
திரு. வி.பூங்காவனம்நாயகர்அவர்கள்
128, யுனைடெட் இந்தியா காலனி,
கோடம்பாக்கம்,
சென்னை. 24.

மா. வ - எ. 85
திரு. கே. வி. சச்சிதாநந்தம் அவர்கள்
43, முருகப்ப முதலிதெரு.
புரசை, சென்னை. 7.

மா. வ - எ. 86
திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
149, பவழக்காரத் தெரு.
சென்னை-1.

காலை அழகு

(கார்வண்ணன்)

கங்குலும் கழியக் காகம்
கரைந்திட சேவல் கூவும்
பங்கய மலர்கள் பூத்துப்
பரிதியின் வரவை ஏற்கும்
கொங்கைகள் அசைந்தே யாடும்
குடத்தில் நீர் தாளம் போடும்
மங்கையர் விரக தாபம்
மாரனைக் கடிந்தே. ஏங்கும்
புள்ளுகள் பள்ளுப் பாடும்
பூவினம் பூத்துக் கொட்டும்
கள்ளினை உண்ணும் வண்டும்
கருத்தினைக் கவர்ந்து பாடும்
கிள்ளைகள் கீதம் பாடும்
கெண்டைகள் துள்ளி ஓடும்
எள்ளினை ஆடும் செக்கும்
இரைந்து நல் ஓசை போடும்
வனிதையர் கரங்கள் சாணம்
வாசலில் தெளித்து நிற்கும்
பனிதுளி வானம் சிந்தப்
பைங்கையோ கோலம் தீட்டும்
கன்றினம் துள்ளி ஆடும்
கறவைகள் பாலைக் கொட்டும்
மின்னொளி மீன்கள் வானில்
மிகவொளி இழந்து நிற்கும்
கீழ்வானம் வெளுத்துப் போகும்
கிழடுகள் மூட்டம் போடும்
கோழிகள் கூண்டை விட்டுக்
குஞ்சுடன் சுற்றப் போகும்
தாழிசேர் ஆய்ச்சி தன்னால்
தயிர்த் திரள் தாளம் போடும்
மேழியைப் பற்றும் மள்ளர்
மேனியோ நடுக்கங் காட்டும்?
பங்கய முகத்துப் பாலர்
பள்ளியின் பாடம் கேட்கும்
பொங்கிய களிப்பினோடும்
பூங்குயில் கூவும் எங்கும்
சங்கொலி முழங்கும் எங்கும்
சகமெலாம் விடியும் வானில்
கங்குலின் பகைவன் தோன்றக்
காலைவந் துற்ற தன்றே.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மையை அறிவோம். இனிய தென்றல், புயல், நீலவான், மேகங்கள் மூடிய வானில் தோன்றும் மின்னல், இடி, ஆழ்கடல், தெள்ளிய நீரோட்டம் முதலியவைகளில்தான் நம் இறைவன் உறைகின்றார். சக்தி சிவன் முதலியவாக இறைவனை அமைத்த நம்முன்னோர்களின் கூர்மையான அறிவிற்கு இணை ஏது?

இயற்கையில் கலந்துறையும் புலவர்கள் இக் காலத்தும் இல்லாமலில்லை. பாரதியார் தமக்குப்பின் அரும்பெரும் நற்புலவர் ஒருவரைத் தமிழுலகிற்கு அறிமுகம் செய்து விட்டார். பாரதிதாசனைக் கவிஞன் என்று தமிழ் உலகிற்கு அறிமுகப் படுத்திய பாரதியார் சொல்லின்படி முதன் முதலாக கனக சுப்புரத்தினம் என்னும் பாரதிதாசன் எழுப்பிய குரல் “எங்கெங்கு காணினும் சக்தியடா” என்பதே இந்த வரி ஒன்றே அவரைப் பெருங்கவிஞன் என்று பறை சாற்றுமே.

எங்கெங்கு கண்டாலும் சக்தி! அவள் வண்ணமோ? ஏழு கடல்களின் நிறம், விரிந்த வான் வெளியிற்றிகழும் கோளங்களனைத்தும் அவ்வெழில் நங்கையின் கைப்பந்துகள். விண்ணில் ஒலிக்கும் ஒலியோ சக்தியின் கல கலவெனும் களிமிகும் நகைப்பு. எழில் சிறந்து ஒளி வீசும் மின்னலோ? நம் அன்னை நகைக்குங்கால் அவள் முத்துப் பற்களினின்றும் பிறக்கும் ஒளியாம்.

அன்னையை நேரில் காண விழைவோருக்கு வழியும் கூறுகிறார் கவிஞர் பாரதிதாசன். கவிச்சுவையைக் கரை காண முயலுகையில் தன் தோளசைத்து நடம் புரிவாளாம், அப்பொன் மேனியாள். நம் செயலில் அவளுடைய திறன்தான் மின்னுகிறது.

இயற்கை எழிலைப் பருகி உலகிற்களிக்கும் நற் புலவர்கள் பெருகி நிறைந்து நாடு வளம்பெற எங்கும் ஒளிரும் சக்தியே அருள் புரிந்துதவுமாக!

* * * *

மணித் திரள்

பூமி முழுதும் திரிந்து அலைந்தாலும் தூய உண்மை அறத்தைக் கண்டறிய முடியாது. அது உன் உள்ளத்திலேயே இருக்கிறது.

— இராமகிருஷ்ணர்.

கலைப் பகுதி — உள வலிமைக்கு

தில்லைத் திருக்கோயிலின் தொன்மையும் வளர்ச்சியும்.

(தேவராஜ விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக வெளியீட்டிற் கண்டது)

இந்திய நாட்டின் தெற்கிலும் வடக்கிலும் உள்ள எல்லா மக்களையும் தன்பால் ஈர்க்கும் தெய்வத்தன்மை வாய்ந்த திருத்தலங்களுள் ஒன்றாக விளங்கும் சிறப்புடையது சிதம்பரம். இதனைப் 'பெரும்பற்றப் புலியூர்' எனவும் 'தில்லைச் சிற்றம்பலம்' எனவும் சைவத் திருமுறைகள் புகழ்ந்து போற்றுகின்றன. வைணவர்கட்குத் திருவரங்கம் பெரிய கோயிலைப் போன்று சைவர்கட்குத் தனிச்சிறப்புடையதாய் விளங்குவது 'கோயில்' என வழங்கும் சிதம்பரமாகும். தில்லைப்பெருங் கோயிலாகிய இதன்கண் திருச்சித்திர கூடம் என்னும் திருமால் கோயிலும் அமைந்திருத்தலால், சைவர் வைணவர் ஆகிய இருசமயத்தாரும் அன்பினால் கூடி வழிபாடு செய்வதற்குரிய தனிச்சிறப்பை யுடையதாகச் சிதம்பரம் விளங்குகின்றது.

இத்தலத்தில் பதஞ்சலி முனிவரது வேண்டுகோளுக்கிசைந்து நடராசப் பெருமான் வெளிப்பட்டு ஆனந்தத் தாண்டவம் ஆடியருளியதாகக் கோயிற் புராணம் கூறுகிறது. வடமொழியிற் பாணினிமுனிவர் இயற்றிய வியாகரணத்திற்குப் பேருரை எழுதிய பதஞ்சலி முனிவர் என்பவர் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர் என்பது அவரது உரைக் குறிப்பினாற் புலனாகும் என்றும், 'மகாபாடியம்' எழுதிய அம்முனிவர்க்கே சிவபெருமான் சிதம்பரத்தில் ஆடல் காட்டியருளினன் என்று அறிஞர் கருதுவர். பதஞ்சலி முனிவர் காலம் கி. மு. இரண்டாம் நூற்றாண்டு என்பது ஆராய்ச்சியாளர் கண்ட முடிபாகும். இதனால் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே தில்லைப் பெருங்கோயில் சிறப்புற்றிருந்ததெனத் தெரிகிறது.

பல்லவ வேந்தனாகிய முதல் சிம்மவர்மன் என்பான் (கி பி. 436–460) சிதம்பரத்தை யடைந்து. சிவகங்கையில் நீராடித் தன் உடல் நோய் நீங்கப் பெற்று 'இரணியவர்மன்' என்னும் சிறப்புப் பெயர் எய்தித் தில்லையம்பலத் திருப்பணி புரிந்து நாள் வழிபாடும் திருவிழாக்களும் நடைபெறுதற்கு நிபந்தங்கள் வழங்கினான் என்பது கோயிற் புராணத்திற் காணப்படுகிறது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயே தில்லைச் சிற்றம்பலம் பொன்வேயப் பெற்றுப் பல்வகையாலும் சிறப்புற்று விளங்கிய செய்தி இதனாற்புலனாகும். அறுபத்து மூன்று அடியார்களுள் ஒருவரும் சிறந்த சிவயோகியும் மூவாயிரம் திருப்பாடல்களை யுடைய 'திருமந்திர மாலை' யென்னும் தமிழாகமத்தை யருளிச் செய்தவரும் ஆகிய திருமூலதேவர் சிதம்பரமாகிய இத்திருத்தலத்தில் ஆடல் புரிந்தருளும் இறைவனது திரு நடனத்தைப் பரவிப் போற்றியுள்ளார்.

கி. பி 600 முதல் 630 வரை ஆட்சி புரிந்த பல்லவ வேந்தனாகிய முதல் மகேந்திர வர்மனை சமண சமயத்தினின்றும் சைவ சமயத்திற்குத் திருப்பிய அருளாசிரியராகிய திருநாவுக்கரசு நாயனார் தில்லைப்பெருங் கோயிலில் வீற்றிருக்கும் சிவபெருமானை எட்டுத் திருப்பதிகங்களாற் பரவிப் போற்றியுள்ளார்.

கி பி 630- முதல் 668-வரை யாண்ட நரசிங்கவர்மன் காலத்தில் விளங்கிய திருஞான சம்பந்தர் இப்பொழுது அண்ணாமலை நகர் என வழங்கும் திருவேட்களத்தில் தங்கியிருந்து கொண்டு சிதம்பரத்தை யடைந்து தில்லையம்பலவாணரை வணங்கித் திருப்பதிகம் பாடிப்பரவியுள்ளார்.

பல்லவ வேந்தர்களுள் முதல் பரமேசுவர வர்மன் [கி. பி. 670—685] எனக் கருதப்படும் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் தில்லையம்பலத்தை வணங்கித் தாம் பாடிய க்ஷேத்திரக் கோவை வெண்பாவில் முதல் திருப்பதியாகக் குறித்துப் போற்றியுள்ளார். இவ்வேந்தனுடைய புதல்வனும் திருத்தொண்டத்தொகையில் "கடல் சூழ்ந்த வுலகெலாங்காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்" எனப் போற்றப் பெறுபவனுமாகிய இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் [கி. பி. 685–720] விளங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லையம்பலவாணரைப் பணிந்து திருப்பதிகம் பாடியுள்ளார். இவருடைய நண்பரும் சேரமன்னனுமாகிய சேரமான் பெருமான் நாயனார் சிதம்பரத்தை யடைந்து தில்லை யம்பலவாணரைப் பணிந்து "பொன்வண்ணத்தந்தாதி" என்னும் பிரபந்தத்தைப் பாடியுள்ளார்.

[வரும்]

பணிப் பகுதி – உணர்வு வலிமைக்கு

தென்னாட்டில் சாந்தி நிகேதனம்

(முத்து வடிவேல்)

குருகுலம் என்றால் குருவோடு தங்கி உறைகின்ற குலம், அதாவது குருவோடு மாணவர் இனம் வாழ்கின்ற இடம் எனப் பொருள்படும். குருவும் மாணவர்களும் வாழ்வதற்கு ஏற்ற இடம் எது? ஊருக்கு வெளியே அமைதி தவழும் கொல்லை வெளியாகிய முல்லை நிலமே குருவும் மாணவர்களும் வாழ்வதற்கு ஏற்ற இடம்.

முற்காலத்தில் தெருவெங்கும் பள்ளிகள் கட்டவில்லை. ஆனால் நாட்டிற் பல நல்லாசிரியர் இருந்தனர். ஆனால் அவர்கள் வாழ்க்கையை நடத்திய இடம் அமைதி நிலவும் தனியிடங்களே, மக்கள் நடமாடிக் கொண்டு அமைதியற்றிருக்கும் இடமன்று. அவர்களைச் சுற்றிலும் மாணவர் குலம் இருந்து தழைத்தது. இன்றேல் நம் செந்தமிழ் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே அரசர்களும் ஆண்டிகளும் கவிஞர்களாயிருந்திருக்கமுடியுமா? தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி, சோழன் நலங்கிள்ளி, இளங்கோவடிகள் முதலிய அரச பரம்பரையில் வந்த பெருமக்கள் கவிஞர்களாக இருந்தது ஒன்றே அக்காலத்தில் நந்தமிழ் நாட்டின் கல்வி நிலையை விளக்கும். இவர்கள் எல்லாம் எங்கே கல்வி பயின்றனர்?

முற்காலத்தில் பெற்றோர் வயது வந்ததும் மக்களைத் தக்க குருவிடத்தில் ஒப்படைத்தனர். அதோடு அவர்கள் கடமை முடிந்தது. ஆனால் அவன் ஒரு கலையிலோ, அல்லது பலகலைகளிலோ, வல்லவனாக்கத் தக்க வயது வந்ததும் பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு குருவையே சார்ந்திருந்தது. கலை அனைத்திலும் ஒருவன் திறமைசாலியாகிவிட முடியாது. ஒருவனுக்குச் சிற்பக் கலை பிடித்திருக்கும், ஒருவன் போர்க் கலையில் வல்லவனாயிருப்பான். ஒருவனுக்கு இலக்கியக் கலை இனிமையானதாய் இருக்கும். அவரவர் தம் தகுதியறிந்து கலை பயிற்றுவித்தால் அன்றி ஒருவரைத் தகுதியுடையவன் என்று சொல்லமுடியாது. தகுதியறிந்தே கலைபயிற்றுவித்தன குருகுலங்கள்.

அத்தகைய குருகுலங்கள் இன்று நாட்டில் பல்கியிருப்பின் எவ்வளவு சிறப்பாகவிருக்கும். கவிஞர் தாகூர் நிறுவிய சாந்தி நிகேதனம் அத்தகைய குருகுலங்களின் நினைவு மக்களை விட்டு அகலாதிருப்பதற்கன்றோ? சாந்தி நிகேதனத்தில் கலைபயிலும் மாணவர் இனத்தின் மகிழ்வுடைய வாழ்க்கையைப் போல வேறெங்கும் காணமுடியாது என்று கூறுவதற்கேற்ற புகழோடு விளங்குகின்றது. "குருகுல வாழ்க்கையே அலாதியானது" என்னும் மொழிகளை அங்கு உறையும் மாணவர்களின் முகங்களே எடுத்துக் காட்டும் என்று வடநாடு சென்று சாந்தி நிகேதனத்தைக் கண்டு வந்தவர் கூறுகின்றனர்.

தென்னாட்டிலும் சாந்தி நிகேதனத்தைப் போல ஒரு குருகுலம் வேண்டும் என்ற எண்ணத்தில் மாம்பாக்கம் குருகுலம் துவக்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் அது தென்னாட்டுச் சாந்தி நிகேதனம் என அழைக்கப்பட்டாலும் அழைக்கப்படலாம். அதற்கு ஆவன செய்ய வேண்டியது குருகுல மாணவர், அன்பர், ஆர்வலராகச் சேர்ந்திருக்கும் அனைவருடைய கடமையாகும். வளர்க '**தென்னாட்டுச் சாந்தி நிகேதனம்!**"

*   *   *   *

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இடமளிக்கவில்லை. இதைக் குறித்து நம் பண்டித நேரு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் வீணாயின. (தம் போக்கு, கொள்கைகளைப் பின்பற்றும் நாடுகளை மட்டுமே மன்றத்தில் இடம் பெறச் செய்யும் அமெரிக்க ஸ்தாபனமான ஐ. நா. மன்றம் இம்மாதிரி ஒரு பக்கமான முடிவை அளித்ததைக் குறித்து வியப்படைதற்கும் இடமில்லை.)

இந்தத் தொல்லையான நிலையில் நம் கடமையை நாம் நினைக்கவேண்டியது முதன்மை. இந்திய அரசின் நல்வாழ்வு நம் கண்ணியமான உறுதியான கட்டுப்பாடுகளில்தான் இருக்கிறது. உலகப் பேரரங்கில் இன்று இந்தியா இருக்கும் நெருக்கடியான நிலைமையை ஒவ்வொரு இந்தியக் குடிமகனும், நன்கு சிந்திக்க வேண்டும். வீணாவாரங்கள் தேர்தற் சிக்கல்கள் அனைத்தையும் ஒருபால் ஒதுக்கி வைத்துவிட்டு எதிர்காலத்தில் நாட்டு நலம் உயர்வதற்கான செயல்களில் தாமதியாது இறங்க வேண்டும் '**வல்லான் வகுத்ததே வாய்க்கால்**' என்று செயலாற்றும் ஐ. நா. மன்றத்தின் கொள்கைகளை மறுத்து நம் உரிமையை நிலைநாட்ட உணர்ச்சியும் உறுதியுங் கொண்டு உழைப்போமாக!

சி. து. க.

*   *   *   *

Phone: 55034 Tel. Enkaay

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53, கிடங்குத் தெரு. சென்னை, 1.

குருகுலச் செய்தி:

ஆசிரியர் விரிவுரைகள்:
(நடக்க இருப்பன)

சூணம்பேடு:

10-2-57 ஞாயிறு காலை 8மணிக்கு மதுராந்தகத்தைஅடுத்த சூணம்பேட்டில் சன்மார்க்க சங்கச் சார்பில் ஆசிரியரின் 'திருஞான சம்பந்தர்' விரிவுரை தொடக்கம்.

சென்னை:

10-2-57 ஞாயிற்றுக் கிழமை மாலை 6- மணிக்குச் சென்னை, சென்னமல்லிகேஸ்வரர்கோயிலில், 'பெரிய புராணம்' விரிவுரை.

மாணவர்க்கு உதவி:

சேலம் 'கிருபாகர் மார்ட்' அவர்கள் குருகுல மாணவர் இல்லத்தில் தங்கிக் கல்வி பெறும் ஏழை மாணவர்கட்காக 40 பக்கம் 'நோட் புக்' 150 அன்புடன் உதவியுள்ளார்கள். அவர்கட்கு எம் நன்றி.

வசதியுள்ள நல்லன்பர்கள் இப்படி கல்வியும், தொழிலும் பண்பும் பயிலும் ஏழை மாணவர்கட்கு இயன்றன உதவுதல் நாட்டிற்கு இப்போது முக்கியம்.

செயற்குழுக் கூட்டம்

3-2-57 ஞாயிறு பகல் 3-30 மணிக்கு, குருகுலச் செயற்குழுவின் கூட்டம் குழுத்தலைவர் திரு. நா சங்கரன் எம்- ஏ. எல் டி அவர்கள் தலைமையில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டம்மிக்க ஊக்கத்துடன் ஆக்க முறைகளுக்கான திட்டங்களோடு விறுவிறுப்புடன் நடைபெற்றது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அக ஆற்றல் வலிமை கொள்ளும் வகையிலேயே புறத்து வாய்ப்புகளையும் அவர் பயன் கொள்ளப் பார்ப்பர். அப்பெரும் போக்கில் ஒழுகுவார்க்கு, அறியாது பிழை செய்வாரைப் பொறுத்தல் மிகவும் எளிதாகின்றது. புறத்தறிவுக்கு அவ்வாறு பொறுக்கும் ஆற்றல் இல்லை, அகத்துணர்வுக்கே உண்டாதலின், அது கோழையற்று வன்மையுள் வன்மையாயிற்று.

— இ. அ.

உணவகத்துக்கு உதவி:

நம் குருகுலத்திற்கு மிகவும் அணுக்கமாயுள்ளவர்களும், தொடக்க முதல் குருகுலத்திற்கு ஆதரவு செய்து வருபவர்களுமான புலம்பாக்கம் பெரு நிலக்கிழார் பெருந்திரு. கே. முத்து மல்லாரெட்டியார் அவர்கள், நிலையாக ஓர் ஏழைப் பிள்ளைக்கு ஆகும் உணவுச் செலவை ஆண்டுதோறும் உதவி வருவதாக அருளுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

200 பிள்ளைகட்கு இப்படி நம் குருகுலத்தில் நல்லோர் உதவி தேவையாக இருக்கிறது. அற உருவான நமது பரந்த உரிமை நாட்டில், இது, எளிதில் அமையக் கூடியதே.

அசற்குத் திரு. ரெட்டியார் அவர்கள் உதவி ஓர் எடுத்துக் காட்டாக இருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். *

ஆர்வலர் சேர்க்கை

ஆண்டுக் காணிக்கை ரூ 5-0-0 செலுத்திக் குருகுலத்தில் ஆர்வலராகச் சேர்ந்துள்ளார் பட்டி. இவர்களுக்கு ஓராண்டுக்கு முல்லைக் கொடி தொடர்ந்து இலவசமாக அனுப்பி வைக்கப் பெறும்.

	சேலம்: முன் வரவு ரூ...	500
101	ஸ்ரீ ஞானம்பிகை டாக்கிஸ்	5
102	பி. எஸ். எஸ். பொம்மண்ண செட்டியார்	5
	சென்னை:	
103	சு. சிவப்பிரகாச செட்டியார்	5
104	பி. வி. ஆறுமுகம்	5
105	ஆர். எஸ். சுந்தரம்	5
106	பி. செயகோபால்	5
107	கே. சுப்பையா நாயுடு	5
108	யூசப் அலி	5
109	ஏ. வி. சிவராமகிருஷ்ணன்	5
110	பி. கிருஷ்ணசாமி	5
111	சி. எம். ராஜகந்தசாமி	5
112	கே. கிருஷ்ணப்பா	5
113	ஆர். சண்முகசுந்தரம்	5
114	டி. சி. நாகலிங்கம்	5
115	சி. எல். சுந்தராசன்	5
116	கு. பார்த்தசாரதி	5
117	என். சின்னதுரை நாயகர்	5
118	எஸ். தருமலிங்க நாயகர்	5
119	ப. நாராயணசாமி	5
120	தா. சீனிவாச நாயகர்	5
	செங்கற்பட்டு:	
121	சுப்பிரமணியம்	5
	ஆக. ரூ...	605

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்,
குருகுல அச்சகம், மதுராந்தகம் (அஞ்சல்); செங்கற்பட்டு மாவட்டம்: தமிழ்நாடு.